ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2432/03 - 2025 අප්‍රේල් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.04.17

*2432/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***2023 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்***

*2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 106(1) மற்றும் பிரிவு 64(1) மற்றும் பிரிவு 68(1) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 105 இன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளுகைச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2025, ஏப்பிறல் 17.

**உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்கான பிரமாணம்**

1. இவ்விதிகள் “2025 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை குறித்துரைக்கப் பயன்படுத்தப்படும் பிரமாணத்திற்கான விதிகள்” என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 68(1)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 64(1)(ஈ) இன் ஏற்பாடுகளின் நியதிகளில் செயற்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபை, வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் தொடர்பில் அவற்றை கொண்டிருக்கும் விதத்திலும் அத்துடன் மேம்படுத்தப்பட்ட பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வையினைக் கடைப்பிடிக்கவும் பிரயோகிக்கும் பொருட்டும், உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்கான பிரமாணத்தினை இத்தால் குறித்துரைக்கிறது.

3. பிரிவு 2 இன்கீழ் விரித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் இங்கேயுள்ள ***அட்டவணையில்*** தரப்பட்டுள்ளன. இவை இவ்விதிகளின் மிக முக்கியமான பகுதிகளாக கருதப்படுகின்றன.

4. இவ்விதிகள் இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் “உரிமம்பெற்ற வங்கிகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்)

5. இவ்விதிகள் 2025 ஏப்பிறல் 17இலிருந்து நடைமுறைக்குவருதலாதல் வேண்டும்.

6. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக:

(i) “வங்கித்தொழில் சட்டம்” என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) “வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு” என்பது பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியிலுள்ள வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினை கருதுதல் வேண்டும். இது, வங்கி மேற்பார்வை மீதான பன்னாட்டு நியமங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சபையாகும்;

(iii) “இலங்கை மத்திய வங்கிச் சட்டம்” என்பது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினைக் கருதுதல் வேண்டும்;

(iv) “ஆளுகைச் சபை” என்பது 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன்கீழ் நிறுவப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் சபை எனக் கருதப்படுதல் வேண்டும்;

(v) “முடுக்கி விகித வெளிப்படுத்துகை அளவீடு” என்பது 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான வெளிப்படுத்துகை அளவீட்டின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை

### உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை குறித்துரைப்பதற்கான பிரமாணம்

**1. அறிமுகம்**

அவற்றின் அளவு, சிக்கல்வாய்ந்ததன்மை ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் இணைப்பு மற்றும் பதிலீட்டுத் தன்மை குறைவாக இருக்கின்றமை என்பனவற்றின் காரணமாக “வீழ்ச்சியடையக் கூடாதளவிற்கு மிகப்பெரியது” எனக் கருதப்படும் நிறுவனங்களினால் ஏற்படக்கூடிய எதிர்மறைப்பக்கத் தாக்கங்கள் பரந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தமது சொந்த நலன்களை நாடுகின்ற தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் பரந்தளவான, முறைமையியல் ரீதியான வெளிப்புற தாக்கங்களை புறக்கணிப்பதன் காரணமாக வினைத்திறனற்ற தேர்வுகளை மேற்கொள்ளக்கூடும்.

இதற்கு மேலாக, அரசாங்க ஆதரவினை எதிர்பார்ப்பதன் மூலம் உருவாக்கப்படுகின்ற தார்மீக ரீதியிலான தீங்குகள் (moral hazard) மிகையான இடர்நேர்வேற்புக்கள், பலயீனமான சந்தை ஒழுங்குகள் சிதைவுகளை ஏற்படுத்தக்கூடிய போட்டிகளை ஊக்குவித்து எதிர்கால நிதியியல் குழப்ப நிலைமைகளுக்கான சாத்தியங்களை அதிகரிக்கின்றன. இதன்விளைவாக, தார்மீக ரீதியிலான தீங்குகளின் சேதம் அத்தகைய ஆதரவுகளிலிருந்து வரி செலுத்துவோர் எதிர்நோக்கக்கூடிய நேரடி நிதியியல் சுமைகளை மேலும் அதிகரிக்கும்.

ஆகவே, வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழு, முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் அவற்றின் தொடர்ந்தியங்கும் இயல்பிற்காக இழப்புக்களை ஈர்க்கும் தன்மையினை அதிகரிப்பதன் மூலம் அவை முறிவடைவதற்கான நிகழ்தகவினைக் குறைப்பதற்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இவ்விற்றைப்படுத்தப்பட்ட பிரமாணத்தின் பிரதான குறிக்கோள் யாதெனில், அத்தகைய வங்கித்தொழில் நிறுவனங்களின் மீதான மேற்பார்வை மட்டத்தின் அளவினை அதிகரிப்பதும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதுமேயாகும்.

## 2. முறைமையியல் முக்கியத்துவத்தின் மதிப்பீடு

2.1. இம்மதிப்பீடு குறிகாட்டி - சார்ந்த அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டதாகும். தேர்வுசெய்யப்பட்ட குறிகாட்டிகள் எதிர்மறையான வெளிப்புறத் தாக்கங்களுக்கு பங்களிக்கக்கூடிய மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு வங்கிகளை இன்றியமையாததாக்கும் பல்வேறு காரணிகளை கொண்டிருக்கின்றன.

2.2. மதிப்பீட்டின் செயற்பரப்பு வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் உட்பட இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் பிரயோகிக்கப்படும். உள்நாட்டு ரீதியாக கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் ஒன்றுதிரட்டப்பட்ட அடிப்படையில் பரிசீலிக்கப்படுவதுடன் வெளிநாட்டு வங்கிக் கிளைகள் தனியான அடிப்படையில் பரிசீலிக்கப்படுகின்றன.

2.3. முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவற்றை மதிப்பிடுவதற்கு பிரமாணம் நான்கு வகைகளைப் பரிசீலனையில் கொள்கிறது. அவை வருமாறு:

(i) வகை (அ) - நிதியியல் நிறுவனத்தின் அளவு;

(ii) வகை (ஆ) - ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் இணைப்பு;

(iii) வகை (இ) - பதிலீட்டுத்தன்மை/நிதியியல் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு; மற்றும்

(iv) வகை (ஈ) - சிக்கல்வாய்ந்த தன்மை.

2.4. நிதியியல் நிறுவனங்களின் அளவு பற்றிய வகை (அ) தவிர, மற்றைய ஒவ்வொரு வகைக்கும் பல்வேறு குறிகாட்டிகள் காணப்படுவதுடன் வகை (ஈ), அதாவது சிக்கல்வாய்ந்த தன்மை தவிர்ந்த, மற்றைய வகைக்கிடையேயான ஒவ்வொரு குறிகாட்டியும் சமமான நிறையினை கொண்டிருக்கின்றன. நியாயாதிக்கங்களுக்கிடையேயான கோரல் குறிகாட்டிகளும் நியாயாதிக்கங்களிடையேயான பொறுப்புக்களின் குறிகாட்டிகளும் சேர்ந்து வகைக்குள்ளே தனியொரு குறிகாட்டிக்கான நிறையைத் தருகின்றன. காரணம் இரண்டு குறிகாட்டிகளினதும் துணை நிரப்பு வகிபாகமே காரணமாகும்.

2.5. உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மதிப்பீட்டின் போது பரிசீலனையில் கொள்ளப்பட்ட குறிகாட்டிகள் கீழேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 1: உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மதிப்பீட்டில் பரிசீலிக்கப்பட்ட குறிகாட்டிகள்**

| வகை (மற்றும் நிறை) | தனிப்பட்ட குறிகாட்டிகள் | குறிகாட்டியின் நிறை |
|---|---|---|
| அளவு (40%) | முடுக்கிவிகிதத்தில் பயன்படுத்தப்பட்ட மொத்த வெளிப்படுத்துகைகள் | 40.00% |
| ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் இணைப்பு (20%) | நிதியியல் முறைமைக்குள்ளேயான சொத்துக்கள் | 6.67% |
| | நிதியியல் முறைமைக்குள்ளேயான பொறுப்புக்கள் | 6.67% |
| | வெளிநின்ற பிணையங்கள் | 6.67% |
| பதிலீட்டுத்தன்மை/நிதியியல் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு (20%) | கொடுப்பனவு நடவடிக்கைகள் | 6.67% |
| | வங்கியல்லா வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் (மொத்தம்) (அரசாங்கம் நீங்கலாக) | 6.67% |
| | வங்கியல்லா வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் (அரசாங்கம் நீங்கலாக) | 6.67% |
| சிக்கல்வாய்ந்த தன்மை (20%) | கருமபீடத்திலான பெறுதிச் சாதனங்களின் பெயரளவு தொகை | 6.67% |
| | நியாயாதிக்கங்களுக்கிடையேயான கோரல்கள் | 3.33% |
| | நியாயாதிக்கங்களுக்கிடையேயான பொறுப்புக்கள் | 3.33% |
| | வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க பிணையங்கள் | 6.67% |

2.6. குறிப்பிட்ட குறிகாட்டியொன்றிற்கான புள்ளியானது ஒவ்வொரு வங்கிக்குமாக, அத்தனி வங்கியின் தொகையினை மாதிரியிலுள்ள அனைத்து வங்கிகளுக்கிடையேயுமான குறிகாட்டித் தொகைக்கான கூட்டுத்தொகையினால் வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது[1], பின்னர் இத்தொகையானது, அடிப்படைப் புள்ளிகளின் நியதிகளில் குறிகாட்டி புள்ளிகளை விளக்குவதற்காக 10,000 இனால் பெருக்கப்படுகிறது.

2.7. ஒவ்வொரு வங்கிக்குமான ஒவ்வொரு வகை புள்ளியும் அவ்வகையிலுள்ள குறிகாட்டி புள்ளிகளின் நிறையேற்றப்பட்ட சராசரியினைக் கணக்கிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. பின்னர் ஒவ்வொரு வங்கிக்குமான ஒட்டுமொத்த புள்ளி அதன் நான்கு வகைப் புள்ளிகளினதும் நிறையேற்றப்பட்ட சராசரியினை கணக்கிடுவதன் மூலம் கணிக்கப்படுகிறதுடன் அவை பின்னர் அணித்தான அடிப்படைப் புள்ளிக்கு முழுத்தானமாக்கப்படுகிறது.

**2.8. முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை மதிப்பிடுவதற்கான வகைகள்**

**2.8.1. வகை (அ) - வங்கியின் அளவு**

ஒரு வங்கி உள்நாட்டு நிதியியல் பணிகளில் கணிசமான விகிதத்தினைக் கொண்டிருக்குமிடத்து, இடர்பாட்டை அல்லது முறிவடைகின்ற நிலைமையெய்துமாயின் அது பொருளாதாரம் அல்லது நிதியியல் சந்தைகளில் தீங்கினை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் அதிகமுண்டு. இது பாரிய வங்கியாக இருக்குமிடத்து, இதன் தொழிற்பாடுகளை மற்றைய நிறுவனங்கள் விரைவாக பொறுப்பேற்பது கடினமாக இருக்குமென்பதனால் அது தொழிற்படும் சந்தைகளில் இடையூறுகளின் இடர்நேர்வு அதிகரிக்கிறது. மேலும், பாரிய வங்கியின் முறிவு முழு நிதியியல் முறைமையினதும் நம்பிக்கையினை குறைத்துவிடும். ஆகவே, முறைமையியல் சார்ந்த முக்கியத்துவத்தினை நிர்ணயிப்பதில், அளவு இன்றியமையாத காரணியாக விளங்குகிறது. அளவினை அளவிடுவதற்கு ஒரு குறிகாட்டி பயன்படுத்தப்படுகிறது: மொத்த வெளிப்படுத்துகை பாசல் III முடுக்கி விதிதத்தின் கீழ் கணிக்கப்படுகிறது.

**2.8.2. வகை (ஆ) - ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் இணைப்பு**

ஒரு நிறுவனத்தில் காணப்படும் நிதியியல் இடர்ப்பாடுகள் இந்நிறுவனங்களிடையே காணப்படும் ஒப்பந்தம் சார்ந்த கடப்பாடுகளின் வலை காரணமாக மற்றைய நிதியியல் நிறுவனங்களிலும் இடர்ப்பாட்டு இடர்நேர்வுகளை கணிசமானளவிற்கு தோற்றுவிக்கக்கூடும். வங்கியொன்று மற்றைய நிதியியல் நிறுவனங்களுடன் அதிகளவிற்கு ஒன்றுடனொன்று தொடர்புகளைக் கொண்டிருக்குமாயின் அதன் முறைமையியல் தாக்கம் பொதுவாக மிகப் பெரிதாக இருக்கும். ஒன்றுடனொன்று கொண்டிருக்கும் தொடர்புகளை அளவிடுவதற்கு மூன்று குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன:

(i) நிதியியல் முறைமைக்குள்ளேயான சொத்துக்கள்;

(ii) நிதியியல் முறைமைக்குள்ளேயான பொறுப்புக்கள்;

(iii) வெளிநிற்கின்ற பிணையங்கள்.

**2.8.3. வகை (இ) - பதிலீட்டுத்தன்மை/நிதியியல் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு**

ஒரு வங்கி இலகுவாக பதிலீடு செய்துவிடமுடியாத சந்தை தொழிற்பாட்டாளராக அல்லது பணி வழங்குநராக தொழிற்படுமிடத்து, அவ்வங்கி இடர்பாட்டை அல்லது முறிவடைகின்ற நிலைமையெய்துமாயின், அவ்வங்கியின் முறைமையியல் சார்ந்த தாக்கம் பாரியளவானதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, வங்கியொன்று குறிப்பிடப்பட்ட வியாபாரத்துறையில் கணிசமான வகிபாகமொன்றினை ஆற்றுமிடத்து அல்லது கொடுப்பனவு முறைமை போன்ற இன்றியமையாத உட்கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதாக இருக்குமிடத்து அதன் முறிவு பணி வழங்கலில் கணிசமான இடைவெளி ஏற்படக் காரணமாகக் கூடும் என்பதுடன் திரவத்தன்மையிலும் குறைப்பினை ஏற்படுத்தும். மேலும், பாரிய சந்தைப் பங்குகளைக் கொண்டுள்ள முறிவடைந்த வங்கியின் வாடிக்கையாளர்கள் மாற்று பணிவழங்குநரைக் கண்டறிவதற்கு உயர்ந்த செலவினை எதிர்நோக்கவேண்டியிருக்கும். பதிலீட்டுத் தன்மையினையும் நிதியியல் நிறுவனங்களின் உட்கட்டமைப்பினையும் மதிப்பிடுவதற்கு மூன்று குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன:

(i) கொடுப்பனவு நடவடிக்கை;

(ii) வங்கியல்லா வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் (மொத்தம்) (அரசாங்கம் நீங்கலாக);

(iii) வங்கியல்லா வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் (அரசாங்கம் நீங்கலாக).

1. வங்கிகளின் மாதிரி எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதற்கான விபரணத்திற்கு 2.9 இனைப் பார்க்கவும்.

இறுதி இரண்டு குறிகாட்டிகளும் வங்கிகள் தொடர்பான வைப்பாளர்கள் மற்றும் கடன்பாட்டாளர் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் நிலையினை வரிசைப்படுத்தும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இடர்பாடு அல்லது முறிவு ஏற்படும் சந்தர்ப்பத்தில் கூடுதலான வாடிக்கையாளர்களை வங்கி கொண்டிருக்குமாயின் இன்னொரு வங்கியின் மூலம் பதிலீட்டினை வழங்குவது மிகுந்த சிரமமானதாக இருக்கும். ஆகவே, அரசாங்கத்தின் பங்குகளை நீக்கி விடுவதற்கான காரணம் இவ்வகையிலுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளின் மீது செல்வாக்கினைக் கொண்டிருக்கும் ஒரு வங்கி வாடிக்கையாளரின் பாரிய தாக்கத்தினை குறைப்பதற்காகும்.

**2.8.4. வகை (ஈ) - சிக்கல்வாய்ந்த தன்மை**

ஒரு வங்கியின் இடர்பாட்டால் அல்லது முறிவால் ஏற்படும் முறைமையியல் தாக்கமானது, அவ்வங்கியின் மொத்த சிக்கல் தன்மையினால் அதன் வர்த்தக நடவடிக்கைகள், அமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் எனும் யாதேனும் நியதிகளில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வங்கி எவ்வளவு அதிகமாக சிக்கலாக இருக்கிறதோ, அதன் தீர்வை நிர்வகிக்கத் தேவையான நேரமும், செலவும் அவ்வளவு அதிகமாக இருக்கும். இச்சிக்கல்வாய்ந்த தன்மையை மதிப்பீடு செய்ய நான்கு குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன:

(i) கருமபீட பெறுதிச் சாதனங்களின் பெயரளவு தொகை;
(ii) நியாயாதிக்கங்களுக்கிடையிலான கோரல்கள்;
(iii) நியாயாதிக்கங்களுக்கிடையிலான பொறுப்புக்கள்;
(iv) வர்த்தக்கப்படுத்தல் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க பிணையங்கள்.

**2.9. வங்கிகளின் மாதிரி**

2.9.1. பின்வரும் பிரமானங்களில் எதையாவது பூர்த்திசெய்கின்ற வங்கிகள் மாதிரியில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதுடன் இம்மதிப்பீட்டு முறையியலில் பயன்படுத்தப்பட்ட தரவின் முழுத்தொகுதியொன்றினை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கவேண்டும்:

(i) ரூ.500 பில்லியனை விஞ்சுகின்ற, பாசல் III முடுக்கி விகித வெளிப்படுத்துகை அளவினைக் கொண்ட வங்கிகள்;
(ii) தேவையானவிடத்து முன்னைய ஆண்டில் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கியொன்றாக குறித்துரைக்கப்பட்ட வங்கிகள்; அத்துடன்
(iii) தேவையானவிடத்து மேற்பார்வை தீர்ப்பின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட வங்கிகள்.

**2.10. வெவ்வேறாக பிரிக்கும் அணுகுமுறை**

2.10.1. குறிப்பிட்ட கீழ்மட்ட அளவினை விஞ்சிய புள்ளிகளைக் கொண்ட வங்கிகள் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. எனினும், மேற்பார்வை தற்றுணிபின் பிரயோகத்தின் அடிப்படையில், கீழ்மட்ட அளவிற்கும் குறைவான புள்ளிகளைக் கொண்ட வங்கிகளை குறித்துரைக்கப்பட்ட முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக உள்ளடக்கலாம்.

2.10.2. உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளானவை மூன்று சமமான அளவினைக் கொண்ட பிரிவுகளாக, முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் கொண்ட அவற்றின் புள்ளிகளின் அடிப்படையில், வேறுபட்ட பிரிவுகளுக்கு பிரயோகிக்கப்படுகின்ற உயர் இழப்பு ஈர்ப்பு தேவைப்பாடுகளின் மாறுபடுகின்ற மட்டங்களுடன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

2.10.3. வழமையான வியாபார காலப்பகுதியின் கீழ் மேம்பாடடைவதற்கும் மேலதிகமாக உள்நாட்டு முறைமையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் எண்ணிக்கையும் குறிப்பிட்ட வகைகளுக்குள் அவற்றின் நிலையும் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் அந்தஸ்த்தின் ஊக்குவிப்புகள் மற்றும் தேசிய ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு பதிலிறுத்தும் விதத்தில் வங்கிகள் அவற்றின் நடத்தையினை மாற்றிக்கொள்வதால் காலப்போக்கில் மாற்றமடையும்.

2.10.4. வங்கிகளின் புள்ளிகள் உயர்ந்த கீழ்மட்டத்தினை விஞ்சுமாயின் அவற்றிற்கு இடமளிக்கும் விதத்தில் மேலதிக பிரிவுகளை உருவாக்கப்படும். இப்புதிய பிரிவுகள் புள்ளிகளின் நிதியக் கிரமத்தில் ஏற்கனவேயுள்ளவற்றின் அதே அளவினைக் கொண்டதாகவும் வங்கிகள் அவற்றின் முறைமை முக்கியத்துவத்தினை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் அவற்றை ஊக்குவிப்பதற்கு படிப்படியான உயர்ந்த மூலதன தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கும்.

**2.11. மேற்பார்வைத் தீர்ப்பு**

2.11.1. வங்கியின் புள்ளியை, மேற்பார்வை தீர்ப்பின் அடிப்படையில் சீராக்கமுடியும். மேற்பார்வைத் தீர்ப்பு விதிவிலக்கான விடயங்களில், குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்ட அளவிடல் அணுகுமுறையினை இரத்துச்செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

2.11.2. இவ்விதிவிலக்கான விடயங்களில், பிரசுரிக்கப்பட்ட வெவ்வேறாக்கல் பிரிவு கணிக்கப்பட்ட புள்ளிகளுடன் இணையவில்லை. மேற்பார்வைத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் பொதுவாக குறிகாட்டிகளில் உள்ளடக்கப்படாத வேறுபட்ட கணியம்சார் அல்லது/அத்துடன் தரம்சார் காரணிகளை பிரதிபலிக்கின்றது.

**2.12. துணைக் குறிகாட்டிகள்**

2.12.1. துணைக் குறிகாட்டிகள் என்பது குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட அளவிடல் அணுகுமுறையினால் மாத்திரம் உள்ளடக்கப்படாத, வங்கியின் முறைமையியல் முக்கியத்துவத்தின் குறித்துரைக்கப்பட்ட அம்சங்களுடன் தொடர்பானவற்றை பரிசீலனையில் கொள்கிறது. இக்குறிகாட்டிகள் தீர்ப்பிற்கு மேலதிகமான ஆதரவாக பயன்படுத்தப்படுகின்றன.

**2.13. காலாந்தர மீளாய்வு மற்றும் சீராக்கல்**

2.13.1. குறிகாட்டி - சார்ந்த அணுகுமுறை உள்ளிட்ட முறையியல், வெட்டு/கீழ்மட்ட புள்ளிகள் மற்றும் வங்கிகள் மாதிரியின் அளவு என்பன வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவின் மீளாய்வுகளுக்கிணங்க, ஏதேனும் திருத்தங்கள் அல்லது மாற்றியமைத்தல்களை உள்ளடக்கும் விதத்தில் மூன்றாண்டுகளுக்குகொருமுறை மீளாய்வு செய்யப்படும்.

**2.14. தொழிற்பாட்டு ரீதியான காலஒழுங்கு**

2.14.1. பிரமாணம் 2025 ஏப்பிறல் 17இலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும் என்பதுடன் முன்னோக்கிப் பயணிக்கையில் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மதிப்பீடு கீழேயுள்ள கால ஒழுங்கின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும்:

**அட்டவணை 2: நடைமுறைப்படுத்துவதற்கான கால ஒழுங்கு**

| காலம் | இலக்கு |
|---|---|
| ஏப்பிறல் | மாதியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட வங்கிகளிலிருந்து தரவுகளை சேகரித்தல் (ஆண்டு தோறும்) |
| ஓகத்து | சேகரிக்கப்பட்ட தரவுகளை மதிப்பிடல் மற்றும் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகளை அடையாளம் காணுதல் (ஆண்டுதோறும்) |
| ஒற்றோபர் | ஆளுகைச் சபையின் ஒப்புதலுடன் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் பட்டியலை வெளியிடுதல் (மூன்றாண்டு இடைவெளிகளில் அல்லது ஆளுகைச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு) |

**2.15. இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணத்தின் நோக்கத்திற்காக,**

(i) "குறிகாட்டி - சார்ந்த அணுகுமுறை" என்பது உலகளாவிய ரீதியில் முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் முறைமை முக்கித்துவத்தினை மதிப்பிடுவதற்காக வங்கி மேற்பார்வை மீது பாசல் குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற முறையியல் எனப் பொருள்படும். தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகளானவை, எதிர்மறையான புறக்காரணிகளை உருவாக்குகின்றதும் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மைக்காக வங்கியொன்றை முக்கியமாக்குகின்றதுமான வேறுபட்ட அம்சங்களை பிரதிபலிப்பதற்காக தேர்வு செய்யப்படுகிறது.

(ii) "முடுக்கி விகிதம்" என்பது 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) "உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடு" என்பது உலகளாவிய ரீதியில் முறைமையியல் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கு தெரிவிக்கப்பட்ட அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்: திருத்தப்பட்ட மதிப்பிடல் முறையியலும் உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மை தேவைப்பாடும் வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் வெளியிடப்பட்டது. (2018 யூலை)

(iv) "நிதியியல் முறைமைக்குள்ளேயான சொத்துக்கள்" என்பது ஏனைய நிதியியல் நிறுவனங்களுடன் வைப்புச் செய்யப்பட்ட அல்லது கடனாக வழங்கப்பட்ட நிதிகளின் மொத்தம் (வழங்கப்பட்ட இணங்கிக்கொள்ளப்பட்டவற்றின் பயன்படுத்தப்படாத பகுதி உட்பட), மற்றைய நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பிணையங்களின் உடமைகள், ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான பிணையங்கள் நிதியிடல் கொடுக்கல்வாங்கல்களின் தேறிய நேர்க்கணிய நடைமுறை வெளிப்படுத்துகை, ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான தேறிய நேர்க்கணியமான சந்தைப்படியான பெறுமதியினைக் கொண்டிருக்கும் கருமபீடத்திலான பெறுதிகள் என்பனவற்றின் நிதித்தொகை எனப் பொருள்படுதல் வேண்டும்.

(v) "நிதியியல் முறைமைக்குள்ளேயான பொறுப்புக்கள்" என்பது ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் வைப்புச் செய்யப்பட்ட அல்லது கடனாக பெறப்பட்ட நிதிகளின் மொத்தம் (பெறப்பட்ட இணங்கிக்கொள்ளப்பட்டவற்றின் பயன்படுத்தப்படாத பகுதி உட்பட) ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான பிணையங்கள் நிதியிடல் கொடுக்கல்வாங்கல்களின் தேறிய எதிர்க்கணிய நடைமுறை வெளிப்படுத்துகை மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான தேறிய எதிர்க்கணியமான சந்தைப்படியான பெறுமதியினைக் கொண்டிருக்கும் கருமபீடத்திலான பெறுதிகள் என்பனவற்றின் நிதித்தொகை என பொருள்படுதல் வேண்டும்.

(vi) "கருமபீட பெறுதிச் சாதனங்களின் பெயரளவிலான தொகை" என்பது உள்நாட்டு முறைமையில் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட கருமபீட பெறுமதிச் சாதனங்களின் அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vii) "நியாயாதிக்கங்களுக்கிடையிலான கோரல்" என்பது உள்நாட்டு முறைமையில் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் நியாயதிக்கங்களுக்கிடையேயான கோரல்களுக்கு வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான அதேபொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(viii) "நியாயாதிக்கங்களுக்கிடையேயான பொறுப்புக்கள்" என்பது உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் நியாயாதிக்கங்களிடையேயான பொறுப்புக்களுக்கு வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ix) "வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள்" என்பது உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்தும் வாய்ந்த வங்கிகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள் என்ற பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.